காஞ்சிபுரம் பெருநகராட்சி

கூட்ட எண்.13/2019-20

2020-ம் ஆண்டு ஜனவரி மாதம் 13-ம் தேதி திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு நடந்த அவசரக் கூட்டத்தின் நடவடிக்கைகள்.

முன்னிலை

திருமதி.ரா.மகேஸ்வரி, பி.காம்.,

தனி அலுவலர்

1. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை 02.12.2008 நாளிட்ட அரசாணை எண்.238-ன்படி, காஞ்சிபுரம் நகராட்சி தேர்வு நிலை நகராட்சியிலிருந்து சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும் பேரூராட்சி மற்றும் ஊராட்சிகள் இந்நகராட்சியுடன் இணைக்கப்பட்டு 51 வார்டுகளாக பிரித்து அரசாணை(நிலை) எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(தேர்தல்) துறை நாள்-14.01.2011-மூலம் நகராட்சி எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்நகராட்சியின் தரம் உயர்த்தப்பட்டதன் அடிப்படையில் தமிழ்நாடு நகராட்சி பொதுப்பணி விதிகளின்படி சிறப்பு நிலை நகராட்சிகளுக்கான பொதுப்பணி பணியிடங்கள் தரம் உயர்த்தப்படாமல் உள்ளது.

நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை-28 அவர்களின் ந.க.எண்.15981/2016/எச்1 நாள்.06.01.2020-ம் தேதிய கடிதத்தில் தமிழ் நாட்டில் உள்ள அனைத்து நகராட்சிகளிலும் அதன் தரத்திற்கு ஏற்றவாறு நகராட்சி பொதுப் பணி பிரிவில் விதிகளின்படியும், நிலைகளின்படியும் நகராட்சி மேலாளர், வருவாய் அலுவலர், உதவி வருவாய் அலுவலர் ஆகிய பணியிடங்களை தோற்றுவித்தல் மற்றும் நகராட்சிகளின் நிலைகளுக்கு ஏற்றவாறு பணியிடங்களின் நிலை உயர்த்த வேண்டி மேல்குறிப்பிடப்பட்ட கடிதத்துடன் இணைத்து வரப்பெற்றுள்ள அனைத்து பணியிடங்களின் சரி தன்மையினை நன்கு பரிசீலனை செய்து உரிய தீர்மான ஒப்புதலுடன் அறிக்கை அனுப்பிவைத்திட கேட்டுக்கொள்ளப்பட்டதற்கிணங்க, தமிழ்நாடு நகராட்சி பொதுப்பணி விதிகளின்படி (<u>as per Tamil Nadu Municipal General Service Rules</u>) சிறப்புநிலை நகராட்சிக்குரிய பணியிடங்களாகிய கீழ்க்கண்ட பணிடங்களை காஞ்சிபுரம் நகராட்சிக்கு தரம் உயர்த்தி வழங்க உரிய பிரேரணையினை சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் மூலம் அரசுக்கு அனுப்பிவைத்திட மன்றத்தின் ஒப்புதல் வேண்டடப்படுகிறது.

| வ. எண் | பதவி | தற்போது உள்ள பணியிட நிலை | தமிழ்நாடு பொதுப்பணி விதிகளின்படி சிறப்புநிலை நகராட்சியில் தரம் உயர்த்தப்பட வேண்டிய பணியிட வகுப்பு மற்றும் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| 1 | மேலாளர் | வகுப்பு- 1A | மேலாளர் | 1 | வகுப்பு- – 1 |
| 2 | வருவாய் அலுவலர் | வகுப்பு- – II | வருவாய் அலுவலர் | 1 | வகுப்பு- – 1A |
| 3 | உதவி வருவாய் அலுவலர் | வகுப்பு- – IV | உதவி வருவாய் அலுவலர் | 2 | வகுப்பு- – II |

அலுவலக குறிப்பு : தமிழ்நாடு நகராட்சி பொதுப்பணி விதிகளின்படி (as per Tamil Nadu Municipal General Service Rules) சிறப்புநிலை நகராட்சிக்குரிய பணியிடங்களாகிய நகராட்சி மேலாளர் பணியிடத்தை வகுப்பு - I நிலைக்கும், வருவாய் அலுவலர் பணியிடத்தை வகுப்பு - IA நிலைக்கும், உதவி வருவாய் அலுவலர் பணியிடத்தை வகுப்பு - II நிலைக்கும் தரம் உயர்த்தி உரிய பிரேரணையினை நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்பிவைத்திட அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.8367/2017/சி1)

தீர்மானம் எண். 341 அனுமதி அளிக்கப்பட்டது.

நகராட்சி அலுவலகம். (ஒம்)ரா. மகேஸ்வரி, பி.காம்.,
காஞ்சிபுரம். தனி அலுவலர்,
நாள்:- 13.01.2020. காஞ்சிபுரம் பெருநகராட்சி

//உண்மை நகல்//

ஆணையர்
காஞ்சிபுரம் பெருநகராட்சி